



# திராவிட மாடல் அரசு

86

**ஜெயபிரகாஷ் கருணாகரன்**

‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....

# ஃபார்முலா-4 பந்தயம்!

## உலக அரங்கில் சென்னை நகரம்





“**தெற்காசியாவின் வாகன உற்பத்தி மையம்**” எனப் பெயர்பெற்ற மாநகரம் சென்னை. சர்வதேச வாகன உற்பத்தி நிறுவனங்கள் பலவும், சென்னையில் தங்கள் தயாரிப்பு ஆலைகளை வைத்துள்ளன. அசோக் லேலண்ட், ஹூண்டாய், ரெனால்ட் நிசான், மஹிந்திரா, யமஹா, பி.எம்.டபிள்யூ மற்றும் பாரத் பென்ஸ் போன்ற புகழ்பெற்ற நிறுவனங்கள், சென்னையில் இயங்கி வருகின்றன. சர்வதேச டயர் உற்பத்தி நிறுவனங்களும் சென்னையில் செயல்பட்டு வருகின்றன.

இந்தப் பின்னணிகளுடன் வாகனத் துறையில் சென்னையை சர்வதேச கவனத்துக்குக் கொண்டு செல்லும் கார் பந்தய நிகழ்வுகளும் சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, சென்னையை அடுத்த இருங்காட்டுக்கோட்டையில் அமைந்துள்ள பந்தய மைதானம், இந்திய அளவில் முக்கியமான கார் பந்தய மைதானமாக உள்ளது.

பிரபலமான எம்.ஆர்.எஃப்-எஃப்-1600 (MRF-F-1600) ஃபார்முலா தொடர் உட்பட முக்கிய தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகள், சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்றன. இந்தப் போட்டிகளின் தேவை, முக்கியத்துவம் என்பது பொதுமக்களுக்கு நேரடியாகத் தெரிவதில்லை என்பதால், கவனம் பெறாமலேயே இருந்த துறை எனலாம். அந்தப் போட்டிகளை, தொலைக்காட்சிகளில் மட்டுமே பார்த்து வியந்த மக்களுக்கு, நேரடி விருந்தளிக்கும் விதமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், சென்னை நகரச் சாலைகளில், ஃபார்முலா-4 கார் பந்தயத்தினை நடத்தி சாதனை படைத்துள்ளது, நம் திராவிட மாடல் அரசு.

31.8.2024 அன்று தொடங்கி, சனி, ஞாயிறு இரண்டு நாள்களும் நடைபெற்ற ஃபார்முலா-4 கார் பந்தயத்தில் தனது முழுகவனத்தையும் செலுத்தி வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டினார் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

அந்தப் போட்டி நடத்துவதால், உருவாகும் பயன்கள் என்பவை, வாகன உற்பத்தித் துறை முதலீடாகவும், வேலை வாய்ப்புகளாகவும், அரசு நிர்வாகத்தின் மீதான நம்பிக்கையாகவும் மாறும் சாத்தியங்கள் கொண்டவை என்பதுதான் போட்டி நடத்தப்பட்டதன் நோக்கம். அதில் வெற்றியும் பெற்றுள்ளது, தமிழ்நாடு அரசு.

### நரேன் கார்த்திகேயன், ஃபார்முலா-1 வீரர்



இந்திய கார் பந்தய வீரர்களுக்கு சர்வதேசத் தளத்தில் போட்டியிடுவதற்கு ஒரு முக்கியமான தளத்தை வழங்கும். மேலும், வெளிநாடுகளுக்குச் செல்லாமல் அவர்களின் திறன்களைக் கூர்மைப்படுத்தவும், விலைமதிப்பற்ற அனுபவத்தைப் பெறவும் உதவும்.

- இந்திய ஓட்டுநர்களுக்கு சர்வதேச அரங்கில், போட்டியிட வாய்ப்பு உருவாகும்.
- பந்தயப் போட்டிகளில் உயர்மட்ட பந்தயத்திற்கான மையமாக தமிழகத்தை நிலைநிறுத்தும்.
- தமிழ்நாட்டில் உள்ள கார் பந்தய வீரர்களுக்கு, சர்வதேச வீரர்களுடன் போட்டியிடும் களம் கிடைத்துள்ளது.
- பல்வேறு துறைகளில் தற்காலிக வேலை வாய்ப்பும் உருவாக்கப்பட்டது.

### கவனம் ஈர்க்கும் கார் பந்தயங்கள்

ஃபார்முலா கார் பந்தயங்கள் என்பவை உலகளாவிய மோட்டார் ஸ்போர்ட்ஸ் அரங்கின் கவனத்தை ஈர்க்கும் முயற்சி. இந்தப் பந்தயங்கள் மூலம் ஓட்டுநர்களின் திறமைகளை மேம்படுத்துவது, வாகன உற்பத்தித் துறையின் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகம் ஆகியவை ஏற்படுகின்றன. அந்த வகையில், ஃபார்முலா-4 பந்தயத்தை நடத்தியதன் மூலம் தமிழ்நாடும் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது.

2023-ஆம் ஆண்டு, தெலங்கானாவிலும் ஹைதராபாத் இ-ப்ரிக்ஸ்-2023 (HYDERABAD EPRIX- 2023) என்ற பந்தயக் கார் போட்டி நடத்தியதன் மூலம் கிட்டதட்ட 700 கோடி ரூபாய் முதலீட்டினை அந்த மாநிலம் ஈர்த்துள்ளது. அந்த வகையில், ஃபார்முலா-4 பந்தயம் மூலம் வாகன உற்பத்தித் தலைநகரான சென்னைக்கு, அதிக முதலீடுகள் வரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னைச் சாலைகளில் ஃபார்முலா-4 போட்டி நடந்து முடிந்தவுடன், ஃபார்முலா கார் பந்தயம் நடத்துவதற்கான சூழல் அமைந்திருக்கிறது என உணர்ந்து, மோட்டார் ஸ்போர்ட்ஸ் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் கவனம் குவித்துள்ளன.

குறிப்பாக, பந்தயக் கார் போட்டிகளில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு தமிழ்நாட்டிலேயே களம் அமையும் வாய்ப்பு உருவாகியுள்ளது. ஃபார்முலா-1 உட்பட பல போட்டிக்கான நேரடிப் பாதையை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது. சர்வதேச வாகன கூட்டமைப்பு (FIA) நடத்தும் அனைத்து பந்தயங்களிலும் தமிழ்நாடு போட்டியாளர்கள் நுழையவும் வழி ஏற்பட்டுள்ளது.

சர்வதேசப் போட்டிகள் நடத்தப்படுவதன் மூலம், பார்வையாளர்கள் போட்டியில் பங்கேற்கும் அணிகள், பிரபலங்கள் வருகை என சர்வதேசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதன் மூலம் சுற்றுலா வளர்ச்சி மேம்படும் சூழலும் அமைந்துள்ளது.

### போட்டி ஏற்பாடுகள்

தெற்காசியாவிலேயே அதிக தொலைவு கொண்ட பந்தயப் போட்டியாக சென்னை போட்டி அமைந்திருந்தது. சென்னை, தீவுத்திடல், நேப்பியர் பாலம் முதல் போட்டி நடக்கும் 3.5 கி.மீ தூரம் வரை இரும்புக் கம்பிகளால் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டன. 8,000 பேர் நிகழ்ச்சியை ரசிக்கும் வகையில், ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

போட்டியில் 16 வீரர்கள் 8 அணிகளாகக் கலந்துகொண்டனர். ஃபார்முலா-4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேஷிங் லீக் என இரண்டு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. கார் பந்தயங்களுக்கு இடையில் பொழுதுபோக்கு கார் சாகச நிகழ்ச்சிகளும் நடைப்பெற்றன. பங்கேற்ற கார்களின் வேகம் மணிக்கு 220 கி.மீ முதல் 250 கி.மீ வரையில் இருந்தன. 1,600 சி.சி.திறன் கொண்ட வாகனங்கள் பங்கேற்றன.

**ஃபார்முலா கார் பந்தய வெற்றி பல்வேறு தரப்பினரின் பாராட்டுகளைப் பெற்றதுடன், தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையில் முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது.**

இரவு 7.30 மணியில் இருந்து இரவு 10 மணி வரை போட்டிகள் நடைப்பெற்றன. தீவுத்திடலைச் சுற்றியுள்ள பகுதிகளில், பொதுப் போக்குவரத்து பாதிக்காத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சர்வதேச மற்றும் இந்திய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நேரடி ஒளிபரப்புச் செய்யும் FANCODE என்கிற செயலி, சென்னையில் நடந்த கார் பந்தயத்தினை நேரடி ஒளிபரப்பாக உலகம் முழுவதும் கொண்டு சென்றது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனிகவனம் செலுத்தி, முறையாகத் திட்டமிட்டு எந்தவித இடையூறுமின்றிப் போட்டிகள் நடைபெற அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கியதுடன், போட்டி நடைபெறும் பகுதிகளைப் பார்வையிட்டு, தொடர் ஆலோசனைகளை வழங்கி இருந்தார். அவரின் முனைப்பே, ஃபார்முலா கார் பந்தய வெற்றியாக பல்வேறு தரப்பினரின் பாராட்டுகளைப் பெற்றதுடன், தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையில் முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது.

**...சாதனை தொடரும்**

**அறிவிப்பு**

புதன்கிழமை இடம் பெறும் மாநாடு தொடர் இனி செவ்வாய்கிழமை தோறும் வெளியாகும்.

### சிறுவனை தண்டித்த ஆபத்து அரசியல்!

உத்தரப்பிரதேச மாநிலத்தில் அம்ரோஹா என்ற பகுதியில் உள்ள தனியார் பள்ளியில், அசைவ உணவு சாப்பிட்டதற்காக ஏழு வயது சிறுவன் தண்டிக்கப்பட்டுள்ளான். ஏழு வயதான இசுலாமிய மாணவன், மதிய உணவாக பிரியாணி கொண்டுவந்து சாப்பிட்டதால், அப்பள்ளி நிர்வாகம் அவனைப் பள்ளியில் இருந்து நீக்கியுள்ளது.

அந்த மாணவனைத் தனி அறையில் அடைத்து வைத்து, தண்டித்தது தொடர்பான வீடியோக்கள் தற்போது இணையதளங்களில் பரவி வருகின்றன. “அந்தச் சிறுவன் மற்ற மாணவர்களுக்கு பிரியாணி கொடுத்து, மதம் மாற்ற முயற்சித்தான்” என்று அப்பள்ளியின் முதல்வர் குற்றம்சாட்டியுள்ளார். “வரும் காலத்தில் கோயில்களை இடிப்பவருக்கு எங்கள் பள்ளியில் இடமில்லை” என்றும் அப்பள்ளி முதல்வர், சிறுவனின் பெற்றோரிடம் வாக்குவாதம் செய்துள்ளார். பாரதிய ஜனதா கட்சி, ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட சங்க் பரிவார அமைப்புகள் உருவாக்கிய வெறுப்பு அரசியல், எந்த அளவுக்கு மக்களின் மனதில் ஊடுருவியுள்ளது என்பதற்கு இந்த நிகழ்வு சான்றாக உள்ளது எனச் சமூக வலைதளங்களில் பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

சமூக நீதியில் பிடிப்பு கொண்ட தமிழ்நாடு, கேரளம் போன்ற மாநிலங்கள், மாணவர்களின் கற்றல் திறன், ஆற்றலை மேம்படுத்துவது எனப் பள்ளிச் சூழலை மாற்றும் பல முயற்சிகளைச் செய்து வருகின்றன. காலை உணவு, சமச்சீரான சத்துணவு, வெளிநாட்டுக் கல்விக்கு உதவி எனப் பல முன்னெடுப்புகளை தமிழ்நாடு அரசு செய்து வருவதை அறிவோம்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் பள்ளி மாணவர்களின் மதிய உணவில், சப்பாத்திக்கு உப்பு மட்டுமே அளித்த நிகழ்வுகளும் நடந்துள்ளன. பள்ளிச் சூழலையும், கல்வித் திறனையும் மேம்படுத்துவதை விடுத்து, அசைவ உணவுக்காகப் பள்ளிச் சிறுவனை தண்டிப்பதுதான் பா.ஜ.க.வின் ஆபத்து அரசியல். உணவு கொடுத்துப் படிக்கச் சொல்கிறது, சமூக நீதி அரசியல். உணவை வைத்து அரசியல் செய்கிறது, நாக்பூர் அரசியல்.

### ஃப்ளாஷ்பேக்



**பேராசிரியருடன் சிறுவனாக நான்!**



வீரதமிழ்ப்பிரியன்

1995-ஆம் ஆண்டு, இனமானப் பேராசிரியர் அவர்கள் புதுச்சேரி மாநிலத்திற்குத் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள வருகை தந்திருந்தார். 21 தொகுதிகளில் கொடியேற்றி, பொதுக் கூட்டத்தில் பங்கேற்க, நோனங்குப்பத்திற்கு வருகை தந்திருந்தார். அந்தக் கூட்டத்துக்கு எனது தந்தை காசி வீரப்பன் அவர்கள், சிறுவனாக இருந்த என்னை அழைத்துக் கொண்டு சென்றிருந்தார். அப்போது பேராசிரியர் அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**– வீரதமிழ்ப்பிரியன்,**
**துணை அமைப்பாளர், தி.மு.க. இளைஞர் அணி,**
**புதுச்சேரி மாநிலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**முதல் பொதுக்கூட்ட செலவு!**

1949-ஆம் ஆண்டு, செப்டம்பர் 18-ஆம் தேதி, சென்னை ராபின்சன் பூங்காவில் நடைபெற்ற கழகத்தின் முதல் பொதுக்கூட்டத்துக்கு ஆன செலவு 1,451 ரூபாய். அண்ணா ரூ.1,000, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ரூ.100, கே.கே.நீலமேகம் ரூ.100, ப.உ.சண்முகம் ரூ.100, எஸ்.நீதிமாணிக்கம் ரூ.100, ஆவுடையப்பன் ரூ.50 என வழங்கினர். அண்ணா பேசத் தொடங்கியபோது, கடும்மழை. மழையில் நனைந்துகொண்டே மக்கள் அவரின் உரையைக் கேட்டனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

602

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131